செய்தி வெளியீடு எண் : 679 நாள்: 12.8.2010

# செய்தி வெளியீடு – 12.8.2010

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு! தமிழக அரசு அறிவிப்பு!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், 2010, ஆகஸ்டு திங்கள் 27 மற்றும் 28 (வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை) ஆகிய நாட்களில், சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர்கள், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்வார்கள்.

27.8.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் கலந்து கொள்ளும் மாநாடும்; அன்று பிற்பகலும், மறுநாள் முழுதும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடும் நடைபெறும். இந்த மாநாட்டில் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள், மாவட்டந்தோறும் நடைபெற்றுவரும் வளர்ச்சிப் பணிகள் பற்றிய விரிவான ஆய்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்துவார்கள்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை